**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**
**நாள்: 25.11.2025**
**அரசு தரப்பு சாட்சி** : 23 (LW38)

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜான் அந்தோணி பீட்டர் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(A1, A3, A4, A6, A7 ஆஜர். A2, A5 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம், பாலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மண்டல மாணிக்கம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 30.07.2021ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது, காலை 09.30 மணிக்கு கீழகாக்காகுளம் கருப்பையாவின் மனைவி வளர்மதி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 139/2021, பிரிவுகள் 147, 148, 341, 323, 324, 427, 302 இதச ஆக வழக்கு பதிவு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:34 +0530

செய்தேன். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம்தான் **வளர்மதி கொடுத்த புகார் மனு** ஆகும். அது **அ.த.சா.ஆ.15** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் இந்த சாட்சி மூலம் குறியீடு செய்ய முடியாது என்று, எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் ஆட்சேபனை தெரிவித்தார். அதற்கு அரசு தரப்பு வழக்குரைஞர் மேற்படி புகார்தாரர் தற்போது வெளிநாட்டில் வசித்து வருகிறார் என்றும், அவரை குறுகிய காலத்தில் வரவழைத்து சாட்சியம் அளிக்க வைக்க வாய்ப்பில்லை என்றும், அதனால் புகார்மனுவினை பெற்ற இந்த சாட்சி மூலம் குறியீடு செய்யலாம் என்று பதிலுரைத்தார். மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு புகார்மனு குறியீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.)

நான் பதிவு செய்த அச்சு **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.16** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கையையும் புகாரையும் துரித தபால் மூலம் நீதிமன்றத்திற்கும், மேலதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார் வாக்குமூலம் யார் பதிவு செய்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.15 புகாரில் "கணவர் வீட்டிற்கு வராததால் நான் கனிராஜசேகரனுக்கு போன் செய்து" என்ற வாசகம் இடைசொற்களாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் மற்ற வாசகங்கள் எழுதப்பட்ட மையும், மேற்சொன்ன இடைசொற்களாக சேர்க்கப்பட்டுள்ள மையும் வேறு வேறு என்றால் சரிதான். அ.த.சா.ஆ.15 சாட்சியாக போட்டுள்ள இரண்டு நபர்களின் முகவரி மற்றும் ஊர்பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

புகாரில் எந்த தேதியில் வாக்குமூலம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் பக்கத்தில் கடைசி வரியில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்தாரரின் கையொப்பத்தின் மேலேயோ, கீழேயோ தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வளர்மதி, கனிராஜசேகரனுக்கு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:36 +0530

போன் செய்தாக சொல்லியுள்ள கைபேசி எண்கள் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதே போன்று செளந்தர்ராஜன், தங்கப்பாண்டியிடம் பேசியதாக சொல்லப்படும் கைபேசி எண்கள் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.15 புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண் 7639309892– என்பது யாருடைய தொலைபேசி என்ற விவரம் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கருப்பையாவிற்கு எந்தெந்த இடத்தில் காயம் இருந்தது என்றும், என்ன நிற ஆடை அணிந்திருந்தார் என்றும், ஆடையில் எந்த பகுதியில் இரத்தம் படிந்து இருந்தது என்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் எந்த புகாரும் பெறவில்லை என்றாலும், ஆய்வாளர் அறிவுறுத்தியதன் பேரில் பின்னிட்டு புகாரை தயார் செய்து, தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:39 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .